DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.147/19

Deposition of Witness: PW 1

| | |
|---|---|
| Name ஜிஜீ | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.12.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் தற்போது மதுரையில் குடியிருந்து வருகிறேன். நான் பாஸ்போட் ஆபிசில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2012 ம் வருடம் கண்ணன் த.பெ.பொம்மையசாமி ராயர்குளம் சாவடி உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம் என்பவர் எங்களது அலுவலகத்திற்கு பாஸ்போட் பெறுவதற்காக விண்ணப்பித்தார். அதற்காக அவர் விண்ணப்பத்துடன் அவரது பிறப்பு சான்றிதழ் தாக்கல் செய்திருந்தார். மேற்படி விண்ணபத்தை பரிசீலித்ததில் அவர் தாக்கல் செய்த பிறப்பு சான்றிதழ் போலியானது என தெரியவந்தது. எனவே மேற்படி நபர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி காவல்துறைக்கு தபால் மூலம் வேண்டுகோள் கடிதம் அனுப்ப வைத்தோம். மேற்படி பிறப்பு சான்றிதழ் உண்மையான என்பது குறித்து சம்மந்தப்பட்ட ஆண்டிபட்டி தாசில்தார் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட போது ஆண்டிபட்டி துணை தாசில்தார் மேற்படி பிறப்பு சான்றிதழ் உண்மையானது அல்ல என்று அறிக்கை அளித்ததார். எனவே மேற்படி நபர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி காவல்துறைக்கு புகார் அனுப்பினோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனு எங்களது அலுவலகத்திற்கு கொடுக்கப்பட்டது தான். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் மனுவை நான் தான் அனுப்பி வைத்தேன். புகார் மனு அசாஆ 1. என்னிடம் காட்டப்படும் அறிக்கை ஆண்டிபட்டி வட்டாட்சியர் மேற்படி கண்ணன் என்பவரின் பிறப்பு சான்றிதழ் உண்மையானது அல்ல என்று கொடுத்த அறிக்கை தான். அது அசாஆ.2. என்னிடம் காட்டப்படும் பிறப்பு சான்றிதழ் தான் எதிரி கண்ணன் எங்களது அலுவலகத்திற்கு பாஸ்போட் விண்ணப்பத்துடன இணைத்து அனுப்பிய பிறப்பு சான்றிதழ் நகல் ஆகும். அது அசாஆ 3.

1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென தெரிவிக்கப்பட்டது.